S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com



RNI (PRGI) No.TNTAM/25/A0208
# உள்ளாட்சி அரசு
தினசரி தமிழ் காலை நாளிதழ்
"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்
youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் டிசம்பர் 15 * 2025 * மலர் -1 * இதழ்-197* VOL-1 * ISSUE-197 விலை ரூ.3 * பக்கம் -4

# 2 லட்சம் பேர் பங்கேற்கும் வடக்கு மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு!

## ★திருவண்ணாமலையில் நேற்று மாலை நடந்தது ; ★முதல்வர் ஸ்டாலின், உதயநிதி கலந்து கொண்டனர்!!

**சென்னை, டிச.15**

2 லட்சம் பேர் பங்கேற்கும் வடக்கு மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் திருவண்ணாமலை யில் நடந்தது. இதில் முதலமைச்சர் மு.க,ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர் .

திருவண்ணாமலையில் இன்று மாலை தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சி இன்று மாலை 4 மணிக்கு திருவண்ணாமலையை அடுத்த மலப்பாம்பாடி கிராமத்தில் உள்ள கலைஞர் திடலில் நடக்கிறது. இதில் 91 சட்டமன்ற தொகுதிகளிலிருந்து 1.30 லட்சம் நிர்வாகிகள் உள்பட சுமார் 2 லட்சம் பேர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சிக்கு தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்குகிறார்.அமைச்சர்கள்துரைமுருகன், கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, மு.பெ.சாமிநாதன், எம்.பிக்கள் கனிமொழி, டி.ஆர்.பாலு., திருச்சி சிவா, ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், என்.ஆர். இளங்கோ மற்றும் க.பொன்முடி எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளரும், அமைச்சருமான எ.வ.வேலு வரவேற்று பேசுகிறார். இதில் தி.மு.க. தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின்கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார். முடிவில் இளைஞர் அணி மாநில துணை செயலாளர் பிரபு கஜேந்திரன் நன்றி கூறினார் .

பொதுக்கூட்டம் 150 ஏக்கர் பரப்பளவில் நடக்கிறது, பாதுகாப்பு பணிக்காக 500 தன்னார்வலர்கள் ஈடுபட உள்ளனர்.





இதற்கான பணியில் தூய்மை அருணை அமைப்பில் இருந்து தன்னார்வலாக பணியாற்ற உள்ளனர். கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நிர்வாகிக்கும் தண்ணீர் பாட்டில், பர்பி, முந்திரி பருப்பு, குளுக்கோஸ் என 10 பொருட்கள்அடங்கியகிட்வழங்கப்பட உள்ளது. அதேபோல் இளைஞர்கள்வெள்ளைபேண்ட் வெள்ளை டீ சர்ட் சீருடையாக அணிந்துக்கொண்டு வரவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே திருவண்ணாமலைக்கு வருகை தரும்முதலமைச்சருக்குமாவட்ட எல்லையான மேல்செங்கத்தில் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இதில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு முதலமைச்சருக்கு வரவேற்பு அளிக்க உள்ளனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியையொட்டி மலப்பாம்பாடி யில் உள்ள கலைஞர் திடலில் கட்சி கொடிகளால் அலங்காரங்களும், மின்னொளி அலங்காரங்களும் செய்யப்பட்டு உள்ளது.

மேலும் 2 லட்சம் பேர் அமரும் வகையில் இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நிகழ்ச்சிக்காக பிரம்மாண்டமாக மேடை அலங்காரம் செய்யப்பட்டு இதில் பெரியார், அண்ணா, கருணாநிதி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் உருவ படங்கள் பொருத்தப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி திடலுக்கு செல்லும் வழியில் பிரம்மாண்டமாக வரவேற்பு நுழைவு வாயில்கள் அமைக்கப்பட்டு உள்ளது. மண்டலங்கள் வாரியாக நடைபெறும் இந்த தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு வடக்கு மண்டலத்தில் இருந்து தொடங்கப்பட்டு திருவண்ணாமலையில் முதலில் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்காக வடக்கு மண்டல ஐஜி தலைமையில் 4 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், மேயர் பெ.ஜெகன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா அவர்கள் (ஒட்டப்பிடாரம்), ஜி.வி.மார்க்கண்டேயன் அவர்கள் (விளாத்திகுளம்), ஊர்வசி செ.அமிர்தராஜ் திருவைகுண்டம்), மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி இரா.ஐஸ்வர்யா, ஆகியோர் உள்ளனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர்இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், மாவட்ட வருவாய் அலுவலர்இரா.ரவிக்குமார், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் ஜெ.தேவி மீனாள், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு. நந்தினி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகளிருக்கு இத்திட்டத்தின் கீழ் பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மூர்த்தி, மேயர் து.கலாநிதி உட்பட பலர் உள்ளனர்.

### மதுரை கே.புதூரில் பரிதாபம்:

## கரையான் மருந்தை குடித்த பெயிண்டர் சாவு!

### தண்ணீர் என நினைத்து குடித்ததால் விபரீதம்!!

**மதுரை,டிச.15–**

மதுரை கே.புதூரில் தண்ணீர் என நினைத்து கரையான் மருந்தை குடித்து பெயிண்டர் பரிதாபமாக உயிரிழந்தார்.

மதுரை கே.புதூர் விஸ்வநாதன் நகர் அண்ணா தெருவை சேர்ந்தவர் முத்துராமன் (56). இவர் பெயிண்டிங் வேலை செய்து வந்தார். குடிப்பழக்கத்திற்கு அடிமையானார். தொடர்ந்து குடித்து வந்ததால் மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதனால் தன் குழந்தைகளுடன் மனைவி பிரிந்து சென்று விட்டார். இவர் பெயிண்டிங் வேலையும், கூலி வேலையும் பார்த்து வந்தார்.

ஆத்திகுளம் ஐ.டி.காலனியில் வீடு ஒன்றில் பெயிண்டிங் வேலை செய்து கொண்டிருந்தார் . அப்போது தாகம் எடுத்ததால் அருகில் பாட்டிலில் இருந்தகரையான்மருந்தை தண்ணீர் என நினைத்து குடித்து விட்டார். இதனால் மயங்கி விழுந்து உயிருக்கு போராடிய முத்துராமனை மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இது குறித்து தல்லாகுளம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வீட்டில் விபசாரம்; 4 பெண்கள் கைது!

**கோவை, டிச. 15:**

கோவையை சேர்ந்த 50 வயது நபர் ஒருவர் கோவை இடையர்பாளையம் பகுதியில் நடந்து சென்று கொண்டு இருந்தார். அப்போது அவரை தடுத்து நிறுத்திய பெண் ஒருவர் வீட்டில் அழகான பெண்கள் இருப்பதாகவும், பணம் கொடுத்தால் அவர்களுடன் உல்லாசமாக இருக்கலாம் என்றும் கூறியுள்ளார். இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த அந்த நபர் பணம் எடுத்து வருவதாக கூறி அங்கிருந்து சென்றார். பின்னர் இது குறித்து கவுண்டம்பாளையம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து விபசாரத்திற்குஅழைத்த அந்தபெண்ணைமடக்கி பிடித்தனர். விசாரணையில் அவர் தடாகம் பகுதியை சேர்ந்த 57 வயது பெண் என்பதும், அவர் இடையர்பாளையம், பழனியம்மாள் லே அவுட் பகுதியில் வீட்டை வாடகைக்கு எடுத்து விபசாரம் நடத்தி வந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் வீட்டில் சோதனை நடத்தினர். அப்போது அங்கு இருந்த 27, 30, 40 வயதுபெண்கள்3பேரை பிடித்தனர். இதை தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிந்து4 பெண்களையும் கைது செய்து, சிறையில் அடைத்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி ஆர்.கே. நகர் சட்டமன்ற தொகுதி,புதுவண்ணாரப்பேட்டை,வ.உ.சி.நகரில்வடசென்னைவளர்ச்சித்திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த விளையாட்டு மையத்தின் முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர்ஜே.ஜே.எபினேசர். சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் முதன்மைச் செயலாளர்கோ. பிரகாஷ். மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் அன்னலட்சுமி ராஜபாண்டியன் திருமண மண்டபத்தில்போக்குவரத்து மற்றும்மின்சாரத்துறைஅமைச்சர்சா.சி.சிவசங்கர்மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் 2 ஆவது கட்ட விரிவாக்கத்தின் கீழ் வங்கி பற்று அட்டைகளைவழங்கினார்.உடன்மாவட்டஆட்சித்தலைவர்பொ.இரத்தினசாமி,அரியலூர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் திருப்பூர் மாநகராட்சி, மணி மஹாலில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் 2ம் கட்டத்தின் கீழ் மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மேயர் ந.தினேஷ்குமார் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், துணை மேயர் ரா. பாலசுப்பிரமணியம், திருப்பூர் மாநகராட்சி மண்டலத்தலைவர்கள் (4ம் மண்டலம்) இல. பத்மநாபன், (3ம் மண்டலம்) கோவிந்தசாமி ஆகியோர் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே ஸ்ரீ சாரதா ஆசிரமத்தில் ஸ்ரீ சாரதா தேவி 173 ஆம் ஆண்டு ஜெயந்தி விழாவை முன்னிட்டு எஸ்தீஸ்வரி ஆத்ம விசாக பெரிய அம்பா தலைமையில் ரத உற்சாக ஊர்வலம் நடைபெற்றது இந்த ஊர்வலத்தில் பள்ளி மாணவ,மாணவிகள் கோலாட்டம், ஒயிலாட்டம், ஸ்ரீ சாரதா தேவி பாடல்கள், சாரதா தேவி உருவப்படம் கையில் ஏந்தியவாறு ஊர்வலமாக சென்றனர், பின்னர் பொதுமக்களுக்கும் பள்ளி மாணவ மாணவிகளுக்கும் ஸ்ரீசாரதா தேவி காட்சியளித்தார்.



# திருப்பத்தூரில் தி.மு.க.வினர் தெருமுனை பரப்புரை!

திருப்பத்தூர் டிச.15

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகரம் , வார்டு 13 , பாகம் 74 ல் , என்வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி,

தமிழ்நாடு தலை குனியாது என்ற முன்னெடுப்பில், தெருமுனை பரப்புரை கூட்டம் நகர கழக செயலாளர் வழக்கறிஞர். சு.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் , தொகுதி பார்வையாளர் வேலூர் ஜி. ரமேஷ் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி மா.பத்மநாபன். வார்டு செயலாளர் ராஜேந்திரன் , வழக்கறிஞர் ராஜா(எ)சரவணன் , தொகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒருங்கிணைப்பாளர் சிவா மற்றும் தேர்தல் வாக்குச் சாவடி பிரதிநிதிகள் வார்டு கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.



## பாரதியார் பிறந்த நாள்:

# அக்கச்சிப்பட்டி பள்ளியில் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டி;பாரதியாரின் முககவசம் அணிவிப்பு!

புதுக்கோட்டை டிச 15

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டைஅருகே அக்கச்சி ப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் திருவள்ளு வர் தமிழ் மன்றம் சார்பில் பாரதியார் பிறந்த தினம் முன்னி ட்டு ஒன்று முதல் 8ம் வகுப்பு மாணவர்களுக்கு கவிதை, கட்டு ரை, பேச்சுப்போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியர்மணிமேகலைஅனைவரையும் வரவேற்றார். மாணவ மாணவிகள் பாரதியாரின் பற்றி சிறப்பாக பேசினார்கள்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தரவகோட் டை ஒன்றிய செயலாளரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமத்துல்லா பாரதியார் பிறந்த தினம் குறித்து பேசும் பொ ழுது மகாகவி பாரதியார் 1882ல் எட்டயபுரத்தில் பிறந்தவர். சின்னச்சாமி,லட்சுமி அம்மாள் சிறுவயதிலேயே கவிதை திறன் வெளிப்பட்டது, எட்டயபுரம் அரசவையில் பாராட்டுப் பெற்றார்; இந்தியா, தமிழ்நாடு பத்திரிகைகளில் பணியாற் றினார். விடுதலைப் போராட்ட உணர்வை ஊட்டினார். பாப்பாபாட்டு, கண்ணன்பாட்டு, குயில் பாட்டு, சுயசரிதை போன்ற பல படை ப்புகளைத் தந்தார்; புதுச்சேரியில் வாழ்ந்து, 1921ல் மறைந்தா லும், காலத்தை வென்ற கவிஞராக தமிழ் மறுமலர்ச்சி, சமூக சீர்திருத்தக் கருத்துகளின் குரலாக இன்றும் வாழ்கிறார்.

மகாகவி பாரதியார் ஒரு சிறந்த தமிழ் கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர், விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார், 'பாரதி' பட்டம் பெற்ற இவர் நவீன தமி .ழ் இலக்கியத்தின் முன்னோடி, சுதந்திரம், பெண் விடுதலை,

சாதி ஒழிப்பு பற்றிப் பாடினார், யாமறிந்த மொழிகளிலே தமி ழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் எனப் போற் றினார், புதுமைப் பெண் என்ற கருத்தை வலியுறுத்தினார், கண்ண ன், பாப்பா பாட்டு, குயில் பாட்டு போன்ற பல புகழ்பெற்ற படைப்புகளைத்தந்தார், தனது எழுத்துக்களால் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உத்வேகம் அளித்தார், 39 வயதிலேயே இயற்கை எய்தினார்,

அவரது கவிதைகள் இன்றும் மக்களால் போற்றப்படுகின்ற ன. பாரதியின் முதல் கவிதை தொகுதி கண்ணதாசன் என்ற பெயரில் 1912 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது பாரதியின் கவிதைகளின் முதல் தொகுப்பாகும் மற்றும் தமிழ் இலக்கிய த்தில் முக்கியமான இடத்தை வகிக்கிறது.

கர்மயோகி இதழின் ஆசிரியர் சுப்பிரமணிய பாரதியவார். இது பாண்டிச்சேரியில் இருந்து 1910ல் வெளிவந்த ஒரு தமிழ் மாத இதழ்.


பாரதியார் இந்த இதழில் பல கட்டுரைகளை எழு தியுள்ளார். இதில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த கட்டுரைகளும் அடங்கும் என்றும், தமிழ்நாடு அரசு பாரதியின் கவிதையில் வரும் புதுமைப்பெண் என்ற வார்த்தை எடுத்து இளங்கலை பட்டப்படிப்பு அரசு கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது என்று பேசினார்.

மாணவ, மாணவிகள் அனைவரும் பாரதியாரின் முக கவசம் அணிந்து உற்சாகமுடன் பாரதியார் பிறந்த தினத்தை கொண்டாடி மகிழ்ந்தனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் களுக்கு பரிசு வழங்கி பாராட்டப்பட்டது. நிகழ்விற்கான ஏற்பா டுகளை ஆசிரியர்கள் சிந்தியா, நிவின், செல்விஜாய், வெள்ளைச்சாமி, ஜெம்ம ராகினி சகாய ஹில்டா கணிப்பொறி உத வியாளர்தையல்நாயகி, மழலையர் ஆசிரியர் கௌரி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# ஹையர் கிராவிட்டி AI தொடர் ஏர் கண்டிஷனர்கள் அறிமுகம்; இந்திய சந்தையில் 17% பங்கை இலக்கு!

மதுரை டிச.15

ஹையர் அப்ளையன்சஸ் இந்தியா, தனது புதிய கிராவிட்டி AI தொடர் ஏர் கண்டிஷனர்களை கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்ற 'AI for Air' நிகழ்வில் அறிமுகப்படுத்தியுள்ளது.



AI AtmoX தொழில்நுட்பத்தில் இயங்கும் இந்த பிரீமியம் ACகள், AI கட்டுப்பாடு 2.0, காலநிலை கட்டைனமிக் சுற்றுச்சூழல் பொருந்துகை மற்றும் மேம்பட்ட ஆற்றல் சேமிப்பு அம்சங்களுடன் இந்திய சந்தையில் நுண்ணறிவு சார்ந்த குளிரூட்டலுக்கான புதிய அளவுகோலை அமைக்கின்றன. இந்த தொடரின் முக்கிய அம்சங்களாக இந்தியாவில் முதன்முறையாக மனித முயற்சியின்றி இயங்கும் ஆட்டோ கிளீன் அவுட்டோர் தொழில்நுட்பம், AI ஃப்ரோஸ்ட்சுயசுத்தம்,100மீட்டர்ஜியோஃபென்ஸ்கொண்ட AI ப்ரீகூலிங் மற்றும் பல்நிலை AI ECO ஆற்றல் மேலாண்மை ஆகியவை இடம்பெறுகின்றன. அறிமுகம் குறித்து ஹையர் அப்ளையன்சஸ் இந்தியாவின் தலைவர் திரு. என்.எஸ். சதீஷ் கூறுகையில், "AIAtmoX மூலம் இயங்கும் ஹையர் கிராவிட்டி AI தொடர், இந்திய நுகர்வோரின் தேவைகளை மையமாகக் கொண்ட அடுத்த தலைமுறை AIஇயக்கப்படும் வீட்டு உபயோகப் பொருட்களை பிரதிநிதி த்துவப்படுத்துகிறது. 'இந்தியாவிற்காக, இந்தியாவில் தயாரிக்கப்பட்டது' என்ற எங்கள் பார்வையுடன், 2030க்குள் சந்தைப் பங்கை 17% ஆக உயர்த்துவதே எங்கள் இலக்கு" என்றார்.

# "நல்ல தேர்வு, எளிய நாளுக்கு — அமீர் கானுடன் பிரிட்டானியா நியூட்ரிசாய்ஸ்!"

திருச்சி டிச.15



இந்தியா முழுவதும் மக்களின் அன்றாட சிறிய முடிவுகளைப் பற்றிய புதிய உரையாடலைத்தொடங்க, பிரிட்டானியா நியூட்ரிசாய்ஸ் தனது புதிய பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. "ஒரு நல்ல விஷயத்தை தேர்வு செய்வது அடுத்த விஷயத்தை எளிதாக்குகிறது" என்ற மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த யோசனை அன்றாடத்தில் எடுக்கப்படும் சிறிய நல்ல தேர்வுகள் – தேநீரில் சர்க்கரை தவிர்ப்பது போன்றவை – நாளின் போக்கையே நேர்மறையாக மாற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த சிந்தனையை அழகாக வெளிப்படுத்த அமீர் கான் தனது இயல்பானநகைச்சுவைமற்றும்நேர்த்தியுடன்பிரச்சாரத்தில் உயிர் ஊட்டுகிறார். லோவ் லிண்டாஸ் உருவாக்கிய இந்த பிரச்சாரம், நல்ல தேர்வுகள் மனநிலையை எவ்வாறு சுலபமாக மாற்றி தொடர்ந்து நல்ல முடிவுகளுக்குத் தள்ளுகின்றன என்பதை நிஜ வாழ்க்கை தருணங்கள் மூலம் காட்டுகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில், பிராண்ட் புதிய 100% மில்லெட்ஸ் ஆப்பிள் சின்னமன் குக்கீகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

## வார்னர் பிரதர்ஸ். டிஸ்கவரி 2025

# ஹாலிடே சீசனை புதிய நிகழ்ச்சிகள் மற்றும் சிறப்பு எபிசோடுகளுடன் மகிழ்ச்சியாக நிறைவு செய்கிறது!

சென்னை டிச.15



இந்த ஆண்டை நிறைவு செய்ய, வார்னர் பிரதர்ஸ் டிஸ்கவரி தனது குழந்தைகள் மற்றும் குடு ம்பங்களுக்கான சேன ல்கள் – கார்ட்டூன் நெட்வொர்க், POGO மற்றும் டிஸ்கவரி கிட்ஸ் – புதிய நிகழ்ச்சிகள் மற்றும் எபிசோடுகளுடன் பண்டிகை கொண்டாட்டத்தை சிறப்பிக்கவுள்ளது. கார்ட்டூன் நெட்வொர்க் டிசம்பர் 15 முதல் 'ஓம் நோம் ஸ்டோரிஸ்' நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துகிறது, இதில் ஓம் நோம், நிபில் நோம், ஓம் நெல்லி மற்றும் ஸ்பைடர் போன்ற கதாபாத்திரங்கள் வண்ணமயமான மற்றும் வேடிக்கையான சாகசங்களில் ஈடுபடுகிறார்கள். நிகழ்ச்சி திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10:30 மணிக்கு, வார இறுதியில் காலை 8:30 மணிக்கு ஒளிபரப்பப்படும். POGO சேனலில் 'ஓமி நம்பர் 1' நிகழ்ச்சி டிசம்பர் 15 முதல் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 11:30 மற்றும் இரவு 7:00 மணிக்கு ஒளிபரப்பாகும். இந்நிகழ்ச்சி மில்க் கிங் கெதார்நாத்தின் பேரன் ஓமியின் குறும்பு மற்றும் சாகச கதைகளை, குழந்தைகள் அனைவருக்கும் நகைச்சுவை மற்றும் மகிழ்ச்சியுடன் வழங்குகிறது. இதேபோல், டிஸ்கவரி கிட்ஸ் டிட்டு (Tittoo) மூலம் டிசம்பர் 25–31 வரை, தினமும் காலை 9:30 மணிக்கு ஹாலிடே ஸ்பெஷல் எபிசோடுகள் மற்றும் சுறுசுறுப்பு நிறைந்த கதைகளை காண்பிக்கிறது. மேலும், கார்ட்டூன் நெட்வொர்க் இல் டீன் டைட்டன்ஸ் கோ புதிய எபிசோடுகள் டிசம்பர் 25–ஜனவரி 2 வரை ஒளிபரப்பப்படுகின்றன, POGOவில் பிக் பிக்சர் மல்டிவர்ஸ், ஜெய் ஜெகன்நாத் டெலிஃபீச்சர் மாரேச்கா மற்றும் சோட்டா பீம் & கடோட்கச் போன்ற சிறப்பு டெலிஃபீச்சர்கள் ஒளிபரப்பப்படுவதால், குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு புதிய கதைகள், வேடிக்கையான கதாபாத்திரங்கள் மற்றும் நிறைய பண்டிகை தருணங்களைகொண்ட மகிழ்ச்சியான விடுமுறை சீசன் உருவாகும்.

# மியூச்சுவல் ஃபண்டுகளில் குறைந்தபட்சம் ₹10 முதலீட்டில் 'தினசரி SIP' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள ஃபோன்பே வெல்த்!

சென்னை டிச 15

share.market

ஃபோன்பே வெல்த் ப்ரோகிங் பிரைவேட் லிமிடெட் (ஃபோன்பே வெல்த்) இன்று மியூச்சுவல் ஃபண்டுகளில் 'தினசரி SIP' அம்சத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய திட்டத்தின் மூலம் பயனர்கள் ஃபோன்பே செயலி மூலம் ஒரு நாளைக்கு வெறும் ₹10 முதலீடு செய்து, ஒழுக்கமான, நீண்டகால முதலீட்டை தொடங்க முடியும். இது மியூச்சுவல்ஃபண்டுகளில் முதலீட்டினை எளிமையாக்கி, முதலீட்டாளர்களுக்கு தினசரி சேமிப்பை செல்வமாக மாற்ற உதவுகிறது. இந்த தினசரி SIP திட்டத்தின் முக்கிய அம்சங்களில், குறைந்தபட்சம் ₹10 முதலீடு மூலம்யும் முதலீடு தொடங்கக்கூடும், UPI ஆட்டோபே மூலம் தானியங்கி பங்களிப்பு செய்யலாம், பல்வேறு ஃபண்ட் விருப்பங்களில் முதலீடு செய்யலாம், தனிப்பயனாக்கக் கூடும் மற்றும் எளிதில் நிறுத்தக்கூடியது. இந்த வசதிகள் முதன்முறையாக முதலீடு செய்யும் பயனர்களுக்கும் அனுபவமிக்க முதலீட்டாளர்களுக்கும் ஒழுக்கமான முதலீட்டு பழக்கத்தை வளர்க்க உதவும். அறிமுக விழாவில் ஷேர்.மார்க்கெட் (ஃபோன்பே வெல்த்) முதலீட்டு தயாரிப்புகள் தலைவர் நிலேஷ் டி நாயக், "தினசரி SIPகள் மூலம், மில்லியன் கணக்கான இந்தியர்கள் தினசரி முதலீட்டை பழக்கமாக மாற்றி, குறுகிய கால சந்தை மாற்றங்களை சமாளித்து நீண்டகால செல்வத்தை உருவாக்க முடியும்" என்று கூறினார். இந்த முயற்சி, நிதி சேர்க்கையை மேம்படுத்தி, ஒவ்வொருவருக்கும் முதலீட்டு அனுபவத்தை அணுகக்கூடியதாக மாற்றும் ஃபோன்பே வெல்தின் நோக்கத்தை வலுப்படுத்துகிறது.



உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட உளுந்தாண்டார் கோயில் நகராட்சி நடுநிலைப் பள்ளியில், பள்ளி கட்டிடம் மிகவும், இடிந்து விழும்,நிலையில் உள்ளதை நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஒப்பந்ததாரரிடம் பராமரிப்பு பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். அப்போது நகர மன்ற உறுப்பினர்கள் ராஜவேல், செல்வகுமாரி ரமேஷ் பாபு, இன்ஜினியர் தேவநாதன், உள்ளிட்டோர் இருந்தனர்.



# புதுக்கோட்டை அருகே அரசு ஆரம்பப் பள்ளியில் பாரதியார் பிறந்தநாள் விழா!

புதுக்கோட்டை,டிச.15

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே காத்தா ன்விடுதி கிராமம் உள்ளது. இங் கு ஊராட்சி ஒன்றிய அரசு ஆரம்பப்பள்ளி உள்ளது. இப்பள் ளியில் ஒன்றாம் வகுப்பு முத ல் ஐந்தாம் வகுப்பு வரை சுமார் 30க்கும் மேற்பட்ட பள்ளி மாண வ மாணவிகள் கலந்து கொ ண்டு பாரதியார் பிறந்தநாள் வி ழா பள்ளி வளாகத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு ஊராட்சி செயலர் முருகன் வரவேற்றார். பள்ளி யின் தலைமை ஆசிரியர் கணேசன் தலைமை தாங்கினார். விழாவில் வக்கீல் கருப்பையா கிராமத் தலைவர் மூக்கையா பள்ளி மேலாண்மை குழு தலைவர் அமராவதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பாரதியார் பிறந்தநாள் விழாவில் ஓய்வு பெற்ற வட்டார கல் வி அலுவலர் குமரன் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் பள்ளியில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் பாரதியார் வேடமிட்டு பாரதியார் கவிதைகளையும் பாடல்களையும் பாடி சிறப்பித்தனர்.

மேலும் கிராமத்தில் உள்ள பள்ளி மற்றும் விளைநிலம் வி வசாயப் பகுதிகள் ஆகியவற்றை ஆரம்ப பள்ளியின் குழந்தைகள் பாரதியார் வேடம் அணிந்து சுற்றி பார்வையிட்டன ர்.அப்போது குழந்தைகள் மகிழ்ச்சியோடு பாரதியாரை நினைவு கூறும் வகையில் விவசாயங்களை அர்ப்பணிப்போடு பார்த்து ரசித்தனர்.

விழாவில் பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாண விகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.பள்ளி மேலாண்மை கு ழு உறுப்பினர்கள். பெற்றோர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவில் பள்ளியின் ஆசிரியர் கயல்விழி நன்றி கூறினார்.




# வாணியம்பாடி அருகே ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் திமுக இளைஞர் அணி சார்பில் அறிமுக கூட்டம்!

வாணியம்பாடி, டிச.15

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த மதனாஞ்சேரி கிராமத்தில் ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் திமுக இளைஞர் அணி சார்பில் அறிமுக கூட்டம் தளபதி அறிவாலயம் வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.ஞானசேகரன் தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.பெருமாள் கோவிந்தம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்து அனைவரையும் வரவேற்றனர். இதில் மேற்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ். ஞானவேலன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சிறப்பு உழைப்பாளர்களாக ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆ. செ.வில்வநாதன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி வடிவேலு, ஆம்பூர் சட்டமன்ற பார்வையாளர் டேம். டி.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி குழு துணைதலைவர்ஜி பிரியதர்ஷினி ஞானவேலன் ஆகியோர் கலந்து கொண்டு வரக்கூடிய சட்டமன்ற தேர்தலில் எவ்வாறு பணியாற்ற வேண்டும், வெற்றி பெற்ற பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் அவைத் தலைவர் எம்.சி. ராமநாதன், ஒன்றிய பொருளாளர் எம். சி.தசரதன், ஒன்றிய துணைத் தலைவர்கள் டி.குமார், எம் சோபா வெங்கடேசன், மாவட்ட பிரதிநிதி சி. சிவக்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் எம் சாவித்திரி மகேந்திரன்,ஆர் செல்வராஜ், பி.நாகராஜ், ஏ.தமிழரசி,எம்.கணேசன்,எம்.வெங்கடேசன்,எம். இலவேந்தன், அருண்குமார்,ஆர்.சதீஷ், கே.மணிகண்டன்உட்படகட்சிநிர்வாகிகள் தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கணேசன் நன்றி கூறினார்.



திருப்பத்தூர் மாவட்டம்.ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர், மாவட்ட கவுன்சிலர் கவிதாதண்டபாணிBA.தலைமையில் என்வாக்குச்சாவடிவெற்றிவாக்குச்சாவடி கூட்டம் நடைபெற்றது. இதில் துணை செயலாளர்கள் பி திருமலை, ஏ சி.இந்திரஜித், BLA2 முகவர்கள் சுகுமார்,ரவி, BDAதிலீபன் ராஜ், கரீம், மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி நிர்வாகிகள் கிளை செயலாளர்கள், கிளை பிரதிநிதிகள் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



தமிழ்நாடு முதலமைச்சர் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு பெருநகர சென்னை மாநகராட்சி,வி.க.நகர் மண்டலம், வார்டு70, பந்தர்கார்டனில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள்ஏ.நாகராஜன், ஸ்ரீதணி, பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# பழைய அங்கன்வாடி: ஆபத்தில் குழந்தைகள்!

## புதிய மையத்தை திறக்க மக்கள் எதிர்ப்பு!!

கிருஷ்ணகிரி டிச.15

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியை அடுத்த மயிலம்பட்டி கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தின் மோசமான நிலையால், அதில் பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. புதிய கட்டிடம் கட்டப்பட்டும், ஒரு மாதமாகியும் பயன்பாட்டிற்கு வராததால், குழந்தைகள் இன்னும் ஆபத்தான பழைய கட்டிடத்திலேயே கல்வி கற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மயிலம்பட்டி கிராமத்தில் உள்ள இந்த அங்கன்வாடி மையத்தில் 15க்கும் மேற்பட்ட குழந்தைகள் நாள்தோறும் பயின்று வருகின்றனர். ஆனால், மையத்தின் கட்டிடம் மிகவும் பழமையாகி, சிமெண்ட் மேல் கூரை எந்நேரமும் பெயர்ந்து குழந்தைகள் மீது விழும் அபாய நிலையில் உள்ளது. கூரையின் சிமெண்ட் பூச்சுகள் அடிக்கடி பெயர்ந்து விழுவதால், குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

இந்த சிதிலமடைந்த பழைய கட்டிடத்தில் இயங்குவதால், அங்கு படிக்கும் குழந்தைகள் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது மட்டுமல்லாமல், கட்டிடத்தை சுற்றியுள்ள பகுதிகளில் கழிவுநீர்கள் கலந்து சுகாதாரக் கேடு நிலவுகிறது. இதனால் குழந்தைகளுக்கு தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதாக பெற்றோர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

பழைய கட்டிடத்தின் ஆபத்துகளைக் கருத்தில் கொண்டும், சுகாதாரமற்ற சூழலைக் கருத்தில் கொண்டும், புதியதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தை உடனடியாக திறக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் மற்றும் குழந்தைகளின் பெற்றோர் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.



# கிருஷ்ணகிரி மாவட்ட பா.ம.க.வினர்,வன்னியர் சங்கம் சார்பில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத இட ஒதுக்கீடு கோரி ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர்!!

கிருஷ்ணகிரி டிச.15

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு பாமக நிறுவனர் ராமதாஸ் அணியின் பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் வன்னியர் சங்கம் இணைந்து கோரிக்கைகளை வலியுறுத்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாநில சொத்து பாதுகாப்பு குழு தலைவர் முனிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் மேகநாதன், பாட்டாளி மக்கள் கட்சியின் மத்திய மாவட்ட செயலாளர் பி. சி.ரவி மற்றும் மாநில கொள்கை விளக்கு அமைப்பு துணை செயலாளர் எடப்பாடி துரைசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வன்னியர்களுக்கு 10.5% தனி இட ஒதுக்கீடு, அனைத்து சமுதாயத்திற்குமான சாதிவாரி கணக்கெடுப்பு, அனைத்து சமூகத்தினருக்கும் இட ஒதுக்கீடு ஆகிய கோரிக்கைகளைவலியுறுத்திஅரசின்கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆர்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதனைத்தொடந்து பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில சொத்து பாதுகாப்பு குழு தலைவர் முனிராஜ் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் அவர்கள் போராடி பெற்ற வன்னியர்களுக்கு 10.5% தனி இட ஒதுக்கீட்டை நிறைவேற்றப்பட வேண்டும், அனைத்து சமுதாயத்திற்குமான சாதிவாரி கணக்கெடுப்பு எடுத்து அனைத்து சமூகத்தினருக்கும் இட ஒதுக்கீடு ஆகிய கோரிக்கைகளை வழியுறுதித்தி கோரிக்கை மனுவினைக் கொடுத்தனர்.

அப்போது மாவட்ட செயலாளர் முருகன், மாவட்ட தலைவர் மகேந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர் கோ.கிருஷ்ணன், ஒசூர் மாநகர செயலாளர் குணசேகரன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்.

# திருப்பத்தூர் மாவட்டத்தில் மகளிர் உரிமைத் தொகை 2 ம் கட்ட விரிவாக்கம்!

## கலெக்டர் தலைமையில் நடந்தது!!



திருப்பத்தூர் டிச.15

தமிழ்நாடு துணை முதல்வர் திமுகக இளைஞர் அணி செயலாளர்.உதயநிதி ஸ்டாலின் இன்று சென்னையில் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் 2ம் கட்ட விரிவாக்கத்தை தொடக்கி வைத்ததைத் தொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்டம், பால்நாங்குப்பம் அடுத்த நந்தினி மஹாலில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி தலைமையில் நடைபெற்ற, வெல்லும் தமிழ் பெண்கள் விழாவில், சிறப்பு அழைப்பாளர்களாக, திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் , ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ. நல்ல தம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர்

மாவட்ட கவுன்சிலர் கவிதாதண்டபாணி கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர். இதில் ஒன்றியக் குழுத் தலைவர் திருமுருகன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சிந்துஜா ஜெகன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா,மாவட்ட பிரதிநிதி மோகன், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன்வாக்காளர்பட்டியல்சிறப்புதீவிரதிருத்தம் குறித்து ஆலோசனைக் கூட்டம் சிறப்பு வாக்காளர் பட்டியல் மேற்பார்வையாளர் (வடக்கு மண்டலம்) ராமன்குமார், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ஆகியோர்தலைமையில்நடைபெற்றது.



திருக்கோவிலூர் தெற்கு ஒன்றியம் சோழவாண்டியபுரம் ஊராட்சியில் பாகம் எண்: 277ல் திருக்கோவிலூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் இராஜேந்திரன் மற்றும் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர் தணிகாசலம் பொதுமக்களிடம் கழகசாதனைகளை எடுத்துரைத்து பரப்புரையை மேற்கொண்டனர்.இந்நிகழ்வில் மாவட்ட,ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் BLC நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



அ.ம.ம.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரனின் 61 வது பிறந்தநாள் விழாவை போச்சம்பள்ளியில் ஒன்றிய செயலாளர் அருள் தலைமையில் பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.



விழுப்புரம்மாவட்டம்திருவெண்ணைநல்லூர்ஒன்றியம் அய்யம்பேட்டை மதுரா புதுப்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட அய்யம்பேட்டையில் இருந்து அமாவாசை பாளையம் செல்லும் தார் சாலையில் இருபுறமும் முள் புதற் மண்டி கிடக்கும் அந்த வழியில் ஒரு வளைவுஉள்ளது அந்த இடத்தில்வரும்பொழுதுவரும்வாகனங்கள்தெரியவில்லை அந்த இடத்தில் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளதால் அந்த முள் புதர்களை அப்புறப்படுத்த வட்டார வளர்ச்சி அலுவலர் தலையிட்டு அந்த முள் புதர்களை அப்புறப்படுத்தி தருமாறு வழியே வரும் வாகன ஓட்டிகள் எதிர்பார்ப்பு.



கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண். 13க்குட்பட்ட நல்லாம்பாளையம், விஜயா நகர், பாலாஜி நகர் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகளால் சேதமடைந்த சாலைகளை மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் அவர்கள், நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, சாலைகளை உடனடியாக சீரமைத்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் உதவி செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, உதவி நகரமைப்பு திட்ட அலுவலர் சத்யா, மாமன்ற உறுப்பினர்கள் சுமதி, ராதாகிருஷ்ணன், மண்டல சுகாதார அலுவலர் முருகன், உதவி பொறியாளர் கோபிநாத், சுகாதார ஆய்வாளர் விஜயகுமார் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



உயர்நீதிமன்றத்தின்உத்தரவின்படி,வளசரவாக்கம்மண்டலம்,வார்டு145,நெற்குன்றம், பெருமாள் கோயில் தெருவில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் இடத்தில் சுமார் 10 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்ட ஆக்கிரமிப்புக் கட்டடம், மாநகராட்சியின் அலுவலர்களால், காவல் துறை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,தமிழ்நாடு மின்சாரவாரியத்தைச்சார்ந்த அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து ஜே.சி.பி. இயந்திரம் மூலம் இடித்து அகற்றப்பட்டது.



# ஆண்டியப்பனூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலக புதிய கட்டிடம்; தேவராஜா எம். எல்.ஏ., அடிக்கல் நாட்டினார்!

வாணியம்பாடி டிச.15

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த ஆண்டியப்பனூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அமைய புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதில் ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் க. தேவராஜி எம். எல். ஏ. பணிகளை தொடங்கி வைத்தார்.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த ஆண்டியப்பனூரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் புதிய கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. ஜோலார்பேட்டை சட்ட மன்றத் தொகுதி உறுப்பினர் க.தேவராஜி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் திருப்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.ஆர்.திருப்பதி, தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் எம்.பிரபு, ஒன்றிய நிர்வாகிகள் முரளி, அன்பழகன், நாஞ்சில்மனோகரன், ஊராட்சிமன்ற தலைவர் வெங்கடேசன், ஒன்றிய குழு உறுப்பினர் வெங்கடேசன், கிளைக்கழக நிர்வாகிகள் காந்தி, சின்னராஜ், சிகாமணி, சாந்தமூர்த்தி, ஆனந்தன், அண்ணாமலை, அம்பலவாணன் , கர்ணாகரன், மதன் மற்றும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## ஆம்பூர் அருகே பள்ளிக்குச் சென்ற

# 8 வயது சிறுமி காணாமல் போனதாக கூறப்பட்ட நிலையில், வீட்டிலே கட்டிலுக்கு அடியில் உறங்கிகொண்டிருந்தார்!

ஆம்பூர்.டிச.15

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் ஊராட்சிக்குட்பட்ட கோவிந்தாபுரம் பகுதியைச் சேர்ந்தவார் கட்டிட தொழிலாளி பாபு. இவரது இரண்டாவது மகள் தனஸ்ரீ(8 வயது). இவர் அதே பகுதியில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்நிலையில் இன்று காலை வீட்டிலிருந்து "பள்ளிக்குச் செல்கிறேன்" என கூறிவிட்டு வெளியேறிய சென்ற தனஸ்ரீ, காலை 10 மணி ஆகியும் பள்ளிக்கு வராததால், பள்ளியில் இருந்து ஆசிரியர் பெற்றோருக்கு தகவல் தெரிவித்தார்.

தகவலை கேட்டு பதறிப்போன பெற்றோர், உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினர் இணைந்து பல்வேறு பகுதியில் தேடும் பணியில் ஈடுபட்டனர். தனுஸ்ரீ கிடைக்காததால்

பெற்றோர் உமராபாத் காவல்துறையில் புகார் அளித்தனர்.

புகாரின் பேரில் போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், தனஸ்ரீ இன்று காலை அவருடைய தாய் ஜெயலட்சுமியின் செல்போனை எடுத்துக் கொண்டு பையில் வைத்து விளையாடிக் கொண்டிருந்ததாக தெரிய வந்தது.

இதனை தொடர்ந்து போலீசார் செல்போன் டவர் மூலம் தேடுதல் பணி தொடங்கினர். இந்நிலையில், வெங்கடசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் வெளியூரை சேர்ந்த மூன்று குடுகுடு ப்பைக்காரர்கள் சந்தேகத்திற்குரிய வகையில் சுற்றித் திரிந்ததாக உள்ளூர் மக்கள் தெரிவித்தனர்.



மாந்திரீகம் செய்வதற்காக சிறுமியை கடத்திச் சென்றிருக்கலாம் என்ற அச்சத்தில், கிராம மக்கள் அந்த குடுகுடுப்பைக்காரர்களை தேடிச் செல்ல, அவர்களில் ஒருவரை காண முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த கிராம மக்கள், ஊரில் சுற்றித் திரிந்த 2 குடுகுடுப்பைக்காரர்களை பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

காவல்துறையினர் அந்த இருவரையும் உமராபாத் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

மேலும் உமராபாத் காவல் ஆய்வாளர் கிஷோர் குமார் தலைமையில் 20க்கும் மேற்பட்ட போலீசார் தனஸ்ரீயை தீவிரமாக தேடி வந்தனர்.

இந்த நிலையில் மாலை 5 மணி அளவில் போலீசார் வீட்டில் ஆய்வு செய்த போது வீட்டில் அறையில் இருந்த கட்டிலுக்கு அடியில் சிறுமி உறங்கிக் கொண்டு இருந்ததை கண்டுபிடித்தனர். சிறுமி வீட்டிலே கிடைத்ததால் பெற்றோர்கள் சந்தோஷமடைந்து தேடும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.



கள்ளக்குறிச்சி AKT பள்ளி வளாகத்தில் நடைபெற்ற வெல்லும் தமிழ்ப் பெண்கள் நிகழ்ச்சியில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், ஆகியோர்கள் கலந்து கொண்டு இரண்டாவது கட்டமாக புதிய மகளிர் பயனாளிகளுக்கு உரிமைத் தொகையை விடுவித்து மேலும் 17 இலட்சம் மகளிரை கூடுதலாகச் சேர்த்து விரிவாக்கம் செய்ததை தொடர்ந்து, திராவிட மாடல் அரசின் சிறப்பு திட்டங்களை எடுத்துரைத்தனர்.

# திருவெண்ணெய்நல்லூர் அருகே நள்ளிரவில் வீட்டின் பூட்டை உடைத்து செயினை அறுத்த திருடன் கைது!

திருவெண்ணெய்நல்லூர், டிச.15

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள செம்மார் முத்து வீரரெட்டியார்நகரைச்சேர்ந்த சங்கர்மகன் நவீன் குமார் (29). இவர் நேற்று இரவு தனது மனைவி மற்றும் குடும்பத்தினருடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் போது நள்ளிரவு சுமார் 1:30 மணி அளவில் வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு வந்த மர்ம நபர் நவீன் குமாரின் மனைவி ரேவதி (26) கழுத்தில் இருந்த தாலி செயின் அறுத்துள்ளார். திடீரென விழித்த ரேவதி கூச்சலிடவே நவீன் குமார் மற்றும் அவரது அப்பா சங்கர் இருவரும் திருடனை பிடிக்க முயன்ற போது, இருவரையும் கீழே தள்ளிவிட்டு திருடன் தப்பி ஓடிவிட்டான். தகவல் அறிந்த திருவெண்ணைநல்லூர் காவல் ஆய்வாளர் அழகிரி மற்றும் உதவி காவல் ஆய்வாளர் அன்பழகன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணை செய்து ஏனாதிமங்கலம் தென்பெண்ணை ஆற்றுப்பகுதியில் பதுங்கியிருந்த திருடனை போலீசார் மடக்கி பிடித்து கைது செய்து அவரிடம் விசாரணை செய்தனர். விசாரணையில் அந்த நபர்திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் தாலுக்கா மங்க ளம்கொம்பு காமனூர் கிராமத்தைச் சேர்ந்த நாகராஜன் மகன் மணிகண்டன் என்கிற பாண்டியன் (34) என்பது தெரியவந்தது. இவர் தற்போது சென்னை குன்றத்தூரில் தங்கி இருந்து அங்கிருந்து சில்வர் டாக்ஸி ஆப் மூலம் வாடகை கார் எடுத்து வந்து திருட வந்தது அம்பலமானது. இதுகுறித்த புகாரின் பேரில் திருவெ ண்ணெய்நல்லூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் அழகிரி வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். திருவெ ண்ணெய்நல்லூர் அருகே வாடகை காரில் வந்து நள்ளிரவில் தாலி செயினை அறுத்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.





# சங்கராபுரம் வடக்கு ஒன்றியத்தில் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' நிகழ்ச்சி நடைபெற்றது!

சங்கராபுரம் டிச.15

இந்த வாக்குச்சாவடி நிகழ்ச்சியில் வர வேற்பு கொடுத்த 8 பாக டிஜிட்டல் முக வர் அருணகிரி மற்றும் இதில் சிறப்பு அழைப்பாளராக ரிஷிவந்தியம் தொகுதி பொறுப்பாளர் தலைமை கழக பேச்சாளர் ச.அ.பெருநற்கிள்ளி மற்றும் சங்கராபுரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்க றிஞர் அசோக்குமார் மற்றும் மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார் மற் றும் இதில் கழக நிர்வாகிகள் ஊராட்சி மன்ற தலைவர் R.M.S.K அர்ச்சனா_காம ராஜன் மற்றும் ஒன்றிய பொருளாளர் நல் லதம்பி கலந்துகொண்டு ரிஷிவந்தியம் சட்டமன்றத்தொகுதிசங்கராபுரம்வடக்கு ஒன்றியம் ரங்கப்பனூர் ஊராட்சி பாகம் 8 இல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி சபதம் ஏற்கப்பட்டு தமிழ்நாடு ஒரு போதும் தலை குனியாது முழுக்கத்துடன் கழக ஆட்சியில் ஐந்தாண்டு சாதனை களையும்சட்டமன்ற உறுப்பினர்வசந்தம்_ க_கார்த்திகேயன் B.Sc. MLA அவர்களின் வளர்ச்சிப் பணிகளையும் வீதி வீதியாக வீடு வீடாக பரப்புரை செய்யப்பட்டது இந்த நிகழ்வில் கிளை கழக செயலாளர் கள் பாக முகவர்கள் BLA2 பாக டிஜிட்டல் முகவர்கள் BDA இளைஞர் அணி மகளிர் அணி மற்றும் சார்பணிகள் கழக நிர்வாகி கள் கிளை செயலாளர் இளையபிள்ளை செல்வராஜ் வெங்கடேசன் ரங்கநாதன் அன்பழகன் ஏழுமலை வெங்கடேசன் புகழேந்தி மெய்யப்பன் செந்தில் ராஜா ராமசாமி கிளை இளைஞரணி தரணி அஜித்குமார்விஜயகுமார்வினோத் அஜித் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# உதயேந்திரம் பேரூராட்சியில் பூத் எண் 134க்கான பரப்புரை!

வாணியம்பாடி டிச.15

வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி உதயேந்திரம் பேரூர் பூத் எண்.134 ல்.என்.வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நடந் தது.திமு திருத்தப்பணிகள் குறித்தும், புதிய வாக்காளர்களை சேர்ப்பது குறித் தும், கழக அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்து கூறும் நிகழ்ச்சியில், உதயேந்திரம் பேரூர் முன்னாள் தலை வரும், கழக செயலாளருமான ஆ.செல் வராஜ், மாவட்ட ஆதி திராவிட நலக் குழு துணை அமைப்பாளர். கோவி. அசோகன், தென்றல் தமிழரசன், பேரூ ராட்சி துணைத்தலைவர் வி.கோவிந்த ராஜ், கிளை கழகச் செயலாளர் ஏ.ராஜ்கு மார்,மாவட்ட பிரதிநிதி. டி. அம்பலவாணன், பேரூர் கழக நிர்வாகிகள்,கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். முருகன், கழக நிர்வாகிகள், பொதுமக் கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூர் 93வது பாக, வாக்குச் சாவடி தெரு முனை பரப்புரைக் கூட்டம்!

திருப்பத்தூர் டிச.15

திருப்பத்தூரில் வார்டு 18ல், பாகம் 93 என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி என்ற முன்னெடுப்பு தெருமுனை பரப்புரை கூட்டம் நடை பெற்றது. இதில், மாவட்ட கழக செயலாளர் , ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி ,



திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி எம். எல். ஏ.மாநில கொள்கைபரப்பு துணை செயலாளர் , தொகுதி பார்வையாளர் வேலூர்ஜி.ரமேஷ், நகர கழக செயலாளர்வழக்கறிஞர்.சு.இராசேந்திரன்தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் நகரமன்ற உறுப்பினர் ஜீவலட்சுமி , வழக்கறிஞர் தொழில்நுட்ப பிரிவு துணை அமைப்பாளர் க.நதீம் அஹமத். பாக முகவர், ப.தௌலத் பாஷா , ஆதில் அஹமத் , நகர பொறியாளர் அணி அமைப்பாளர் பைரோஸ் மற்றும் வார்டு கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



## உளுந்தூர்பேட்டை சட்ட மன்ற உறுப்பினர் திறந்து வைத்த

# பகுதி நேர நியாயவிலைக்கடை காட்சி பொருளாக உள்ளது!

திருவெண்ணெய்நல்லூர் டிச.15

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம் பூசாரிபாளையம் பகுதி நேர நியாயவிலைக்கடை திறந்து 1வருடம் ஆகிறது

ஆனால் இது வரையிலும் மக்கள் பயன்பாட்டிற்கு வரவில்லை பொதுமக்களின் வருபணம் 10லட்சம் செலவு செய்தும் எந்த பலனும் இல்லை தொடர்ந்து 2கிலோ மீட்டர் சென்று அரிசி வாங்க வேண்டிய அவலநிலைகண்டுகொள்ளாதஅதிகாரிகள்உடனடியாக திறக்கவில்லை என்றால் விரைவில் பாட்டாளி மக்கள் கட்சியின் போராட்டம் நடைபெறும்.வழக்கறிஞர் அஜித்குமார் அறிவிப்பு



விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர சேமிப்பு கிடங்கில் பெல் நிறுவன பொறியாளர்களால் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை முதல் நிலை சரிபார்ப்புக்கு உட்படுத்தும் பணியினை விழுப்புரம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# நவி மும்பை ஐரோலியில் டீப்டெக் பயிற்சி மையம்: அனுதீப் அறக்கட்டளை டிபிஎஸ் பேங்க் இந்தியா இணைந்து துவக்கியது!

கோவை டிச. 15

மும்பை, கொல்கத்தா, புனே மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் வசிக்கும் பொருளாதார மற்றும்சமூகரீதியாகபின்தங்கிய 2,400இளைஞர்களுக்குத்திறன்மேம்பாட்டுபயிற்சிஅளித்து, அவர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை அமைத்திடும் வகையில் தங்களது மூன்றாண்டு திட்டத்தின் முதல் முயற்சியாக இந்த மையத்தை அனுதீப் அறக்கட்டளை மற்றும் டிபிஎஸ் பேங்க் இந்தியா ஆகியவை இணைந்து திறந்துள்ளன. டிபிஎஸ் பேங்க் இந்தியாவின் குழும மூலோபாய சந்தைப்படுத்தல் மற்றும் தகவல் தொடர்புத் துறையின் செயல் இயக்குனர் நெக்சாத் வகில் கூறுகையில், ஐரோலியில் டீப்டெக் பயிற்சி மையத்தைஅனுதீப்அறக்கட்டளையுடன்இணைந்துதுவக்கி இருப்பது என்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது இந்தத் திட்டத்தின் நோக்கம், பொருளாதார மேம்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் விதமாக குறைந்தபட்சம் 70 சதவீத வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, இதன் மூலம் இளைஞர்களுக்கு மாதம் ரூ.22,000 முதல் ரூ.25,000 வரைசம்பளத்திலான வேலை வாய்ப்பை பெற்றுத் தருவதாகும்.டிபிஎஸ் பேங்க் இந்தியாவின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் 'பின்தங்கிய இளைஞர்களுக்கான டீப் டெக் திட்டம்', நிரலாக்கம் அல்லாத டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், தகவல் தொடர்பு, தொழில்தயார்நிலை மற்றும் மென்திறன்கள் ஆகியவற்றில் தொழில்துறைக்கு ஏற்ற பயிற்சிகளை வழங்கி, செயற்கை நுண்ணறிவு கருவிகள், கேமிபிகேஷன் மற்றும் நவீன கற்றல் மேலாண்மை தொழில்நுட்பம் மூலம் இங்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்தத் திட்டம், கற்பவர்களை டிஜிட்டல் பணிக்கு ஏற்ற வகையில் தயார்படுத்தும். இந்த நிகழ்ச்சியில் அனுதீப் அறக்கட்டளை உறுப்பினர்களும், டிபிஎஸ் பேங்க் இந்தியா ஊழியர்களும் கலந்து கொண்டு இந்த திட்டத்தில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதலை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தினார்கள் என்று தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தமிழ்நாட்டின் சாதனை பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ஆவது கட்ட விரிவாக்கம் தொடக்க விழாவினை காணொளி காட்சி வாயிலாக விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரி கூட்டரங்கில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க.பொன்முடி, செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், உட்பட பலர் உள்ளனர்.



# டி.கொளத்தூர் ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி துண்டு பிரசுரம்; சந்திரசேகரன் ஒன்றிய கழக செயலாளர் மாவட்ட கவுன்சிலர் வீடு வீடாக வழங்கினார்!

திருவெண்ணெய்நல்லூர் டிச.15

உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றியத்திற்குப்பட்ட டி. கொளத்தூர் கிராமத்தில் தி.மு.க.வின் என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி என்ற தலைப்பில் துண்டு பிரசுரம் வினியோகம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் & மாவட்ட கவுன்சிலர் சந்திரசேகரன் கலந்துகொண்டு வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்களை வினியோகம் செய்து திமுக அரசு நிறைவேற்றிய திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை பொதுமக்களின் எடுத்து கூறினார். முன்னதாகஅவர்கட்சிநிர்வாகிகளிடம் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உருவம் பொறித்த ஸ்டிக்கரைவழங்கினார் நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பாளர் சுப்பரமணியன் துணை ஒருங்கிணைப்பாளர் அய்யனார் டி.கொளத்தூர் ஊராட்சி கிளை செயலாளர்கள் ஏழுமலை மு.ஊ.ம.தலைவர் பழனிசாமி சிவபாலன் ஞானராஜ் ரமேஷ் சரவணன் இளைஞர் அணி நிர்வாகி சத்தியராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள் நாராயணன் ஏழுமலை

சாமிதுரை BL2 குபேந்திரன் BL2 சுந்தர் மாணரணி நிர்வாகிகள் ஜானகிராமன் தமிழ்ச்செல்வன் அருள் மணிகண்டன் மற்றும் டி.கொளத்தூர் ஏழுமலை ஒன்றிய மாணரணி துணை அமைப்பாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்தல் குறைத்தல் மற்றும் தீர்வு காணுதல் குறித்து பல்துறை பங்குதாரர்களுக்கான ஒரு நாள் கலந்தாய்வு கூட்டம் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.




# பெண்கள் , சிறுமிகளுக்கு எதிரான சைபர் வன்முறைக்கான விழிப்புணர்வு!

திருக்கோயிலூர் டிச.15

திருக்கோவிலூரில் மாவட்ட சமூக நல அலுவலகம் மற்றும் அதே கொம் பின்னகம் பெண்கள் வள ஆதார மையம் சார்பாகஒன்றுபடுவோம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான சைபர் வன்முறைக்கான விழிப்புணர் நிகழ்ச்சி நடைபெற்றது

பாலின அடிப்படையிலான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான 16 நாள் செயல்பாட்டின் ஒரு பகுதியாக திருக்கோயிலூரில் அதெ கோம் பின்னகத்தின் பெண்கள் வள ஆதாரமையம் 16 நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் இளைஞர்களைமேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்வில் 50 வளர் இளம் பருவ பெண்கள் மற்றும் 50 வளர் இளம் பருவ ஆண்கள்உற்சாகமாகபங்கேற்றனர்.மைத்ரி திட்டத்தின் நிர்வாக இயக்குனர் சீனு பெருமாள் மைத்ரி திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்த்தி எப்சிபா மற்றும் மைத்ரி திட்டத்தின் கள ஒருங்கிணைப்பாளர் பபிதா ஆகியோர் தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது,திருக்கோயிலூர் காவல் உதவி ஆய்வாளர் . பிரபாவதி வட்டார வள மையம் ஆசிரியர் பயிற்றுநர கலியபெருமாள் டேனிஷ் மிஷன் பள்ளி தலைமை ஆசிரியர் கென்னடி சிறப்பு விருந்தினராக . மாவட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க விழிப்புணர்வு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் மற்றும் இந்நிகழ்ச்சியில்

இணைய வன்முறைக்கு எதிரான ஒற்றுமையின் முக்கியத்துவத்தையும் இந்த நிகழ்வு மையமாகக் கொண்டது, ஆன்லைன் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகத்தைத் தடுக்கவும் நிவர்த்தி செய்யவும் கூட்டு நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்தியது.மற்றும் வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கு அதெ கோம் பின்னகத்தின் சார்பாக புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது. மாணவர்களுக்கு நோட்,பேனா, பென்சில்,பை பரிசாக வழங்கப்பட்டது.